பாடம்
07

## இயேசுவின் நண்பர்கள்

அன்று சமய பாட நேரம் ஆசிரியை மேசையின் மேல் இருந்த **("கசற் றெகோட்")** ஒலி நாடாப் பெட்டியை இயக்கி விட்டார். அப்போது,

அம்மா சொல்லுங்களே - அப்பா சொல்லுங்களே
இயேசுவை அன்பு செய்ய - வழியைச் சொல்லுங்களே.
உங்கள் பொருத்தனையை - நினைவில் கொண்டு
நீங்களும் வாருங்களே - என் கையைப் பிடித்துக் கொண்டு.
இயேசுவின் அன்பர்கள் - இப்படித்தான் இருப்பார்கள்
அன்புப் பாதை தன்னில் - என்றும் நடப்பார்கள்.
இயேசுவின் வார்த்தையினால் - இன்புற்று வாழ்திடவே
சொல்லாலும் செயலாலும் - இன்று சொல்லித் தாருங்களே.

என்ற இனியதொரு பாடல் பாடப்பட்டது. நாங்கள் அனைவரும் ஆவலுடனும் ஆர்வமுடனும் பாடலுக்குச் செவிமடுத்தோம். பாடல் முடிந்ததும் நாம் எல்லோரும் சேர்ந்து இந்தப் பாடலைப் பாடுவோமா? என்று எங்கள் ஆசிரியை கேட்டார்.

வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடலைப் பாடிய போது ஆசிரியை இவ்வாறு சொன்னார்.

இயேசு சிறுவர்களை மிகவும் அன்பு செய்கிறார். "சிறுவர்களை என்னிடம் வர விடுங்கள்" என்று இயேசு எப்போதும் சொல்லுகிறார். நீங்களும் இயேசுவை அன்பு செய்ய விரும்புகிறீர்களா? ஆம்.

அப்படியானால் நாம் கீழ்ப்படிவுள்ள பிள்ளைகளாக இருக்க வேண்டும். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். உண்மை பேச வேண்டும். சுறுசுறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். மன்னிப்பளிக்கும் நல்ல மனப்பாங்கு உள்ளவர்களாக இருக்க வேண்டும்.



சிறுவர்களாகிய நாமும் சில சமயங்களில் பிழையான வேலைகளைச் செய்கிறோம். ஆனால் உடனே அவற்றிற்கு மன்னிப்புப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதே போன்று பிழை செய்பவர்களுக்கு மன்னிப்புக் கொடுக்க வேண்டும். நாம் செய்யும் சின்னச் சின்னப் பிழைகளுக்காக மனம் வருந்துவோமானால் இனிமேல் அந்தப் பிழைகளைச் செய்யமாட்டோம். இந்த உறுதியோடு இருப்போமானால் இயேசு நம்மிடத்தில் எவ்வளவு அன்புடையவராய் இருப்பார்.

அநேக பிழையான காரியங்களைச் செய்த அநேகர் தாம் செய்த குற்றங்களை நினைத்து மனம் வருந்திய போது இயேசு அவர்களை மன்னித்தார். ஒரு நாளும் அவர், அவர்களைத் தண்டிக்கவில்லை. மிகவும் அன்பாகவும் இரக்கமுடனும் அவர்களுடைய பிழைகளைச் சுட்டிக் காட்டினார். ஆம் பிள்ளைகளே நாமும் இயேசுவைப் போல் ஆக முடியும்.

வகுப்பில் எல்லோரும் சமாதானமாக இருப்போம். மற்றவர்கள் தனியாக வேலை செய்யும் போது உதவி செய்வோம். நாம் செய்யும் சிறிய குற்றங்களையும் ஏற்றுக் கொள்வோம். மன்னிப்புப் பெற பின்வாங்காதிருப்போம். நாம் நினைத்தால் இயேசுவின் நல்ல நண்பர்களாக இருக்க முடியும் என்று ஆசிரியை கூறினார்.

**ஒப்படை**

நீங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் என்ன செய்வீர்கள்.

1. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் செய்த போது
2. உங்களுடைய உயிர் நண்பன் உங்களை மனம் நோகச் செய்த போது
3. நீங்கள் இயேசுவை அதிகம் அன்பு செய்ய வேண்டுமானால்
   என் பிழை எல்லாம் - பொறுத்தருள்வாய்
   செந்நீர் வியர்வை சொரிந்தவனே - என் பிழை எல்லாம்
   பொறுத்தருள்வாய்.